11.03.2025 S.C.No.138 of 2017 P.W. 9 – Siva @ Sivasankar

Crl.M.P.No. 836 to 838 of 2025, dated 07.03.2025 மனுக்கள் அனுமதிக்கப்பட்டு சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு 1 முதல் 6 எதிரிகளின் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி

குறுக்கு விசாரணை தொடங்கிய நேரம் மதியம் 02.15 P.M.

மேற்படி சாட்சியின் தாய்மொழி தெலுங்கு என்பதால் ஏற்கனவே அந்த சாட்சி முதல் விசாரணை பதிந்தபோது அவரது வாக்குமூலத்தை திரு. அமரேந்திரன் தெலுங்கு மொழி ஆசிரியர் அரசு உயர்நிலைப்பள்ளி, சேர்க்காடு, வேலூர் மாவட்டம் அவர்களால் தமிழில் மொழிப்பெயர்க்கப்பட்டு பதியப்பட்ட நிலையில் இன்றும் அதே திரு. அமரேந்திரன் அவர்கள் மூலம் சாட்சியிடம் கேட்கப்படும் கேள்விகளை எதிரிகள் தரப்பு வழக்கறிஞர்கள் தமிழில் எடுத்துரைத்து அதை சாட்சிக்கு தெலுங்கில் மொழி மாற்றம் செய்து சொல்லி சாட்சி பதில் அளித்ததை அதே தெலுங்கு ஆசிரியர் தமிழில் சொன்னதை கீழ்க்கண்டவாறு பதியப்பட்டது.

**1ம் எதிரியின் தரப்பில் குறுக்கு விசாரணை**

கேள்வி: உங்களை பள்ளிக்கொண்டா காவல் நிலைய காவலர்கள்தான் ஆந்திராவில் இருந்து அழைத்து வந்தார்கள் என்றால்?

பதில்: சரிதான்.

கே: அந்த காவலர்கள் அவர்களது சீருடையில்தான் இருந்தார்கள் என்றால் ?

ப: சரிதான்.

கே: உங்களையும் அருணாச்சலத்தையும் (பலமனேர்) ஆந்திராவிலிருந்து அழைத்து வந்த பள்ளிக்கொண்டா காவல் நிலைய காவலர்கள் நேராக காவல் நிலையத்திற்குதான் அழைத்து வந்தார்கள் என்றால் ?

ப: சரிதான்.

கே: பள்ளிக்கொண்டா காவல் நிலையத்தில் பணியில் இருந்த காவலர்கள் தான் தங்களையும் அருணாச்சலத்தையும் விசாரித்தார்கள் என்றால் ?

ப: அழைத்து வந்தார்கள். விசாரித்தார்கள். என்னுடைய தாய்மாமா கே.முனிராஜு பள்ளிக்கொண்டா காவல் நிலையத்திற்கு வந்து கையொப்பம் போட்டுவிட்டு என்னை ஆந்திராவுக்கு அழைத்துச்சென்றார்.

கே: ஆஜரில் உள்ள எதிரிகள் எவரும் தங்களையோ அருணாச்சலத்தையோ விசாரிக்கவில்லை என்றால் ?

ப: சரிதான்.

கே: பள்ளிக்கொண்டா காவல் நிலையத்தில்தான் தங்களையும் அருணாச்சலத்தையும் உட்கார வைத்திருந்தார்கள் என்றால் ?

ப: சரிதான்.

கே: ஆஜரில் உள்ள எதிரிகள் இந்த வழக்கில் என்னென்ன தரவரிசை (Rank) என்று தங்களுக்கு தெரியாது என்றால்?

ப: சரிதான்.

கே: இந்த நீதிமன்றத்தில் இந்த வழக்கில் இருக்கும் ஆவணங்களின் எண்களோ அதில் உள்ள தரவரிசைகளோ தங்களுக்கு தெரியாது என்றால்?

ப: சரிதான்.

கே: உங்கள் தாய்மாமா வீட்டிற்கு பள்ளிக்கொண்டா காவல் நிலைய காவலர்கள்தான் வந்தார்களே ஒழிய ஆஜர் எதிரிகள் யாரும் வரவில்லை என்றால் ?

ப: ஆறு போலீசார் வந்தார்கள். யார் வந்தார்கள் என்று தெரியாது.

கே: இந்த வழக்கின் எதிரிகளில் ஏற்கனவே மரணமடைந்தவரின் பெயர் உங்களுக்கு தெரியாது என்றால் ?

ப: தெரியாது.

கே: ஆஜரில் உள்ள 1ம் எதிரி மார்டின் பிரேம்ராஜ், தங்களையும் அருணாச்சலத்தையும் பள்ளிக்கொண்டா காவல் நிலையத்தில் ஒப்படைத்துவிட்டு வேறு பணிக்காக வெளியில் சென்றுவிட்டார் என்றால் ?

ப: தெரியவில்லை.

கே: பட்டியல் ஆவண எண் 66 (15 தாள்கள்), அ.த.சா.ஆ. 12 முதல் அ.த.சா.ஆ.14 வரையுள்ள ஆவணங்கள் எல்லாமும் ஜெராக்ஸ் தான் என்றால் ?

ப: சரிதான்.

கே: இந்த ஆவண எண் 66–ல் உள்ள 15 தாள்களில் காணப்படும் நபர்களின் உண்மையான புகைப்படங்களை தங்களிடம் காட்டவில்லை என்றால் ?

ப: காண்பிக்கவில்லை.

கே: பட்டியல் ஆவண எண் 66–ல், அ.த.சா.ஆ.12 முதல் 14–ல் சிபிசிஐடி போலீசார் கேட்டுக்கொண்டதற்கு இணங்க நீங்கள் கையொப்பமிட்டிருக்கிறீர்கள் என்றால் ?

ப: சரிதான்.

கே: பட்டியல் ஆவண எண் 66, அ.த.சா.ஆ.12 முதல் 14–ல் உள்ள புகைப்படங்களில் யார் பாஷா என்று தெரியாது என்றால் ?

ப: தெரியாது.

கே: பட்டியல் ஆவண எண் 66–ல், அ.த.சா.ஆ.12 முதல் 14–ல் உள்ள ஒளிநகலில் காணப்படும் நபர்களில் யாருக்கு எவ்வாறான காயம் இருந்தது என்பது குறித்து தங்களுக்கு தெரியாது என்றால் ?

ப: சரிதான்.

கே: அ.த.சா.ஆ.10–ல் காணப்படும் புகைப்பட ஜெராக்ஸில் உள்ள நபர் பள்ளிக்கொண்டா காவல் நிலையத்தில்தான் இருந்தார், அவர் நல்ல முறையில்தான் நடந்துக்கொண்டிருந்தார் என்றால் ?

ப: அங்கு ஒருவர் மட்டும் இல்லை. பலபேர் இருந்தார்கள்.

கே: அவர்கள் நல்ல முறையில்தான் இருந்தார்கள் என்றால் ?

ப: அது குறித்து எனக்கு தெரியாது.

கே: ஏற்கனவே சிபிசிஐடி போலீசார் விசாரித்தபோது தற்போது என்னவெல்லாம் சொன்னீர்களோ அதைத்தானே அந்த போலிசாரிடம் சொன்னீர்கள் என்றால்?

ப: சரிதான்.

கே: இதற்கு முன்பு இந்த நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்கும்போது சிபிசிஐடி மிரட்டியதால் அவர்கள் சொல்லிக்கொடுத்தபடி சாட்சியம் அளித்தீர்கள் என்றால் ?

ப: பயமுறுத்தவில்லை. ஏற்கனவே சொன்ன Statement ஐ படித்து காட்டி அவ்வாறு சொல்ல சொன்னார்கள்.

**2 முதல் 4 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1ம் எதிரியின் தரப்பு குறுக்கு விசாரணையை ஏற்றுக் கொள்கிறார்.

**5ம் மற்றும் 6ம் எதிரிகளின் தரப்பில் குறுக்கு விசாரணை**

1ம் எதிரியின் தரப்பு குறுக்கு விசாரணையை ஏற்றுக் கொள்கிறார். குறுக்கு விசாரணை தொடர்ச்சி

காவல் நிலையத்தில் நிரைய ஜனங்கள் இருந்தார்கள் என்றால் சரிதான். நானும் அருணாச்சலமும் காவல் நிலையத்தில் இருந்தபோது ஒரு போலீசார் என்னை அடித்தார். அங்கு நிரைய போலீசார்கள் இருந்தார்கள் என்றால் சரிதான். அதில் யாரோ ஒரு போலீஸ்காரர் என்னை ஒரு அடி அடித்து உட்கார வைத்தார்.

என்னை அடித்து உட்கார வைத்த போலீசார் யார் என்று எனக்கு தெரியாது. என்னுடைய தாய்மாமன் வந்து என்னை காவல் நிலையத்தில் இருந்து அழைத்துச்சென்றார். சிபிசிஐடி போலீசார் என்னை விசாரித்தார்கள். வேலூரில் வைத்து விசாரித்தார்கள்.

என்னிடம் சிபிசிஐடி போலீசார் சில தாள்களில் கையெழுத்து போடச்சொன்னார்கள் என்றால் இல்லை. Statement டைப் செய்ததில் கையெழுத்து போடச்சொன்னார்கள். பள்ளிக்கொண்டா காவல் நிலையத்தில் Statement எதுவும் கொடுக்கவில்லை. என்னுடைய தாய்மாமன் எழுதிக்கொடுத்துவிட்டு என்னை அழைத்துச்சென்றார். தற்போது சொன்ன விஷயங்கள் அனைத்தும் சரியானவை.

**மறுவிசாரணை– இல்லை**

**விசாரணை முடிவுற்ற நேரம் மதியம் 03.20 மணி**

PERUMALSAMY MURUGAN

Digitally signed by PERUMALSAMY MURUGAN
Date: 2025.03.11 17:58:49 +0530